விலை: சதம் 75

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

ஈழநாடு
THE EELANADU
மலர் 23 ஆடி 13 றம்ழான் 25 இதழ் 164
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-7-1981

யாழ் நகரில்
தமிழ், சிங்கள படங்களை
தொலைக்காட்சியில் விரைவில்
பார்க்கலாம்.
ஏரியல் போடத் தேவையான
ஜி. ஐ. பைப்புகளுக்கு
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

# தாதிமார் விவகாரம்: அமைச்சு முடிவு வாபஸ்!

## யாழ். அ. சபை இன்று கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் இரண்டாவது கூட்டம் இன்று காலை யாழ். செயலகத்தில் திரு. சு. நடராஜா தலைமையில் நடைபெறுகிறது.

இவ்வாண்டின் மிகுதி ஆறு மாதங்களுக்கும் அடுத்த ஆண்டுக்குமான பட்ஜட் தயாரிப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

## தூதுக்குழுவிடம் அமைச்சர் காமினி அறிவிப்பு

(கொழும்பு)

**அண்மைக்காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அரசாங்க ஆஸ்பத்திரி தாதிகள் விவகாரம் தொடர்பாக அமைச்சு ஏற்கனவே எடுத்த இரண்டு தீர்மானங்களை சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா வாபஸ் பெற்றுள்ளார்.**

சுகாதார அமைச்சர் நேற்று தம்மைச் சந்தித்த தாதிகள் தொழிற்சங்க தூதுக்குழுவிடம் மேற்கண்ட முடிவைத் தெரிவித்தார்.

தாதிகளின் தொழிற்சங்க நடவடிக்கையின்போது சுகவீனக் கடிதங்களை கொடுத்துவிட்டு வேலைக்கு வராத நாட்களை சம்பளமற்ற லீவாகவும் ''சட்டப்படி வேலைசெய்யும்'' இயக்கத்தை மேற்கொண்ட நாட்களை அரைநாள் லீவாகவும் கணிக்கவேண்டும் என்ற சுகாதார அமைச்சின் இரு முடிவுகளுமே இப்போது வாபஸ்பெறப்பட்டுள்ளது.

### லீவு, விடுமுறை ரத்தும் வாபஸ்

தாதிகளின் லீவுகள், விடுமுறைகளை ரத்துச் செய்து அமைச்சு எடுத்த முடிவும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

தாதிகளின் சீருடை, காலணி கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகள் பற்றி அமைச்சு பரிசீலிக்கும் என்றும் அமைச்சர் தூதுக்குழுவிடம் உறுதி கூறியுள்ளார்.

- இந்தியாவில் அவசரச்சட்டம் -

## அத்தியாவசிய சேவையில் வேலைநிறுத்தத்துக்குதடை

புதுடில்லி. ஜூலை 27

இந்தியாவில் அத்தியாவசிய சேவைகளில் வேலைநிறுத்தம் செய்வது புதிய அவசர சட்டம் ஒன்றின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி இன்று பிரிட்டன் செல்லுமுன்னர் இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

ரயில், தபால், தந்தி, தொலைபேசி, விமான. வங்கி, சுகாதார, பாதுகாப்பு உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஆறுமாதங்களுக்கு வேலைநிறுத்தங்களைத்தடைசெய்யும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவசியம் ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தை மேலும் ஆறுமாதங்களுக்கு நீடிக்கலாம்.

'அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டம்' என அழைக்கப்படும் இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு தண்டனையாக 2ஆயிரம் ரூபா அபராதம் அல்லது ஓராண்டு சிறை அல்லது இரண்டும் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கு:

## தகவலறிந்து சென்றபோது அன்ரன் வீதியில் கிடந்தார்

### சப்இன்ஸ்பெக்டர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''பசி ஹோட்டலுக்குக்கிட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்ததாகத் தகவல் கிடைத்தது. நான் அவ்விடத்திற்குச் சென்றதும், பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் வீதியில் விழுந்து கிடப்பதைக் கண்டேன்.''

பொலிஸ்சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கில் சாட்சியமளித்த குருநகர் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் சிசில்குமார மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானார்.

சப்இன்ஸ்பெக்டர் சிசில்குமார் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

இத்தகவல் கிடைக்கும் போது நான் தட்டாதெருச் சந்தியில் இருந்தேன். எனக்குத் தெரிந்த நபர் ஒருவர்தான் இத் தகவலைத் தந்தார். நான் உடனடியாகப் பொலிஸ் நிலையத்துடன் றேடியோ தொடர்புகொண்டேன். இதனைக் கூறிவிட்டு ஸ்தலத்திலேயே பொலிஸார் வரும்வரை நின்றேன். மனோகராசந்தியில் 3 மோட்டார் சைக்கிள்கள் காங்கேசன்துறை வீதிப் பக்கமாகச் சென்றன. நான் ஸ்தலத்திற்கு வந்தபோது அவ்விடத்தில் ஒருவரும் நிற்கவில்லை. தகவல் கொடுத்தவர் துவிச்சக்கர வண்டியில் வந்தார்.

'பசி ஹோட்டல் பக்கத்தில் வெடிச்சத்தம் கேட்டது. சனங்கள் ஓடுகிறார்கள் என்று அவர் தகவல்தந்தார்.

''இந்த மோட்டார்சைக்கிள்கள் வேகமாக வந்தன. அவர்கள் அணிந்திருந்த உடையை நான் அவதானிக்கவில்லை. நான் அந்நேரத்தில் அவர்களைப்பற்றி எதுவும் நினைக்கவில்லை. இந்த 3 மோட்டார் சைக்கிள்களைத்தவிர நான்வேறு வாகனங்கள் ஒன்றையும் காணவில்லை. இந்த 3 மோட்டார் சைக்கிள்களில் எத்தனை பேர் போனார்கள் என்று எனக்குக் கூறமுடியாது. நான் வேறுவாகனங்களையும் சந்தித்தேன்.''

பொலிஸ் கான்ஸ்டபிள் விஜயசேகரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''கடந்த வருடம் ஆகஸ்ட் 2-ம் தேதி யாழ்ப்பாணம் பொலிஸில் கடமையாற்றினேன். அன்று நான் பொலிஸ் நிலையத்தில் உள்ள றேடியோ நிலையத்தில் கடமை புரிந்தேன். எனக்கு முதல் சாட்சியமளித்த சிசில் குமார ரோந்துசுற்றும் வானில்

[6ம் பக்கம் பார்க்க]

சுண்டிக்குளம் கொலை வழக்கு!

## சட்டத்தரணிகளின் தொகுப்புரை முடிந்தது

[யாழ்ப்பாணம்]

சுண்டிக்குளம் கொலைவழக்கில், அரசசட்டத்தரணிகளும் எதிரிகளின்சட்டத்தரணிகளும் தொகுப்புரைநிகழ்த்தினார்கள்.

இவ் வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் சுண்டிக்குளத்தில் 79 மே 17ம் திகதி தங்கராசா அல்லது தோமஸ் என்பவரைக் கொலைசெய்ததாக தாமோதரம்பிள்ளை, து. கணபதிப்பிள்ளை அல்லது கந்தையா, த. பூபாலசிங்கம் அல்லது நவரத்தினம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1ம், 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகள் சி. அம்பிகைபாலன், சத்தியநாதன், எஸ். சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி. அம்பிகைபாலன், சட்டத்தரணி திருமதி அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜரானார்கள். 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். சிறிசிவாயா, சட்டத்தரணி செல்வி நளினி நவரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் அரசசட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. [ஈ]

வட்டக்கச்சியில்

## பெண் படுகொலை!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியைச் சேர்ந்த அரசரத்தினம் மனோன்மணி [38 வயது] என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கொலைச் சம்பவம் தொடர்பாக மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மரணமான அரசரத்தினம் மனோன்மணியின் மரண விசாரணையின்போது இறந்தவரின் மருமகன் பொன்னம்பலம் அமிர்தலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

[6-ம் பக்கம் பார்க்கவும்]

### மணிவாக்கு

இந்தக்கமக்காரன் எப்படி நிந்த நிலத்தை இவ்வளவு நன்றாகப் பண்படுத்தியுள்ளானோ அது போல ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

—யோகசுவாமிகள்

# நமது நோக்கு

## இரு அமைதியான வெளி நடப்புகள்

புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டசபையின் நிர்வாகம்பற்றி சபைத்தலைவர்கள் அனைவரையும் கூட்டிய கூட்டம் ஒன்று கொழும்பில் அண்மையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி பிரதி அமைச்சர் முதலிய உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் அது. கூட்டம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றது.

தமிழுக்கிடமில்லையா என்று வினவிய யாழ் மாவட்டசபைத் தலைவர் திரு. எஸ். நடராசா அவர்களுக்கு தமிழில் ஒரு மொழிப்பெயர்ப்புரை இறுதியில் வழங்கப்படும் என்ற பதிலைத் தலைவர் கொடுத்தார். அதுமட்டுமல்ல சிங்களம் புரியாத தமிழ் அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஆங்கிலம் புரியுமே என்ற கருத்தும் இடம்பெற்றது.

சிங்களம் மட்டும் என்ற கொடிய சட்டத்தை அன்று எதிர்த்துப் போராடிக்காயமுற்ற திரு. நடராசா எவ்வாறு இந்தப் பதிலை ஏற்க முடியும்?

சிங்களம் அரச மொழியாகும் தமிழ் தேசிய மொழியென்றும் இன்றைய ஆட்சி சொல்லளவில் பிரசாரம் செய்கிறது. அங்கு கூடியிருந்தவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் அங்கத்தவர்களே. சிங்களமும் தமிழும் அங்கு கட்டாயமாக இடம்பெற்றிருக்க வேண்டிய மொழிகள், விரும்பமானவர்கள் சபை ஏற்றுக்கொண்டால் ஆங்கிலத்தில் பேச இடமளித்திருக்கலாம். ஆயினும் இவ்விரு மொழிகள் புரியாத இனத்தவர்கள் அங்கு எவரும் இருக்கவில்லை; இருக்கவும் முடியாது.

இதனை விளக்கிய திரு. நடராசாவிற்கு தமிழிலும் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யவில்லை யென்ற பதில் கிடைத்தது. அதுமட்டுமல்ல கடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் இடம்பெற்ற கேலியும் கிண்டலும் அங்கு முன்னோடியாக ஒத்திகை போன்று நிகழ்ந்தன.

ஆங்கிலம் விளங்கும் தமிழனை இங்கு குழப்பத்துக்காக வந்திரக்கள் என்ற பரிகாசப் பேச்சுகளும் தொனித்தன. திரு. நடராசா வெளிநடப்புச் செய்தார்.

தவிர்க்க முடியாத ஒரே ஒரு வழி அக்கூட்டத்தை எவ்வகையிலும் குழப்பாது அமைதியாக யாழ் மாவட்டசபைத் தலைவர் வெளியேறினார், மறுமொழிய தமிழ்ப பிரதிநிதிகள் ஏன் அவரைப் பின்பற்றவில்லை என்பது மர்மம்.

தமிழ் ஒரு தேசிய மொழி யாகும் அங்கு அதற்குரிய இடம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நாட்டின் இரு மொழிகளும் இரு கண்கள். சிங்கள மக்களுக்கு சிங்களம் எத்தனை அவசியமோ, தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ் அத்தனை அவசியம்.

உள்ளூராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்டுத் தொடங்கிய அபிவிருத்திச்சபைகள் நாட்டில் நிலவும் பல தீராத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் என்ற நம்பிக்கை பல தமிழ்மக்களுக்கு உண்டு. தொடக்கத்திலேயே தமிழ் மொழிக்கு அவமானம் ஏற்பட்டால் பிள்ளையார் பிடித்த கதை போல் முடியுமல்லவா?

இது ஒரு சிறு விடயம் அல்ல, சிங்களத்தை நாட்டின் ஒரேஒரு அரச மொழியாகவும் சிங்களம் புரியாத மற்றைய இனத்தவர்களை ஆங்கிலம் மூலம் ஒற்றுமைப்படுத்தலாமெனவும் ஆட்சியாளர் நினைக்கக் கூடும்.

நிர்வாக ரீதியில் தமிழ் பேசும் மக்கள் எதையும் எங்கேயும் தமிழில் நடத்த வதற்குப் பழகிக் கொள்வது அவசியம்.

இரண்டாவது வெளிநடப்பு கடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் நிகழ்ந்தது.

இன்றைய ஆட்சியில் எதிர்க்கட்சி பலவீனப்படுத்தப்பட்டுவரும் போதும், உண்மையில் அது சமாதியடையவில்லையென்பதை நாட்டுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

எதிர்க்கட்சியின் பலப் பாராளுமன்ற விவகாரங்கள் நடைபெற்றது இதுதான் இந்த ஆட்சியில் முதல்முறையில்லை. சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று எதிர்க்கட்சியினர் இவ்வருட ஆரம்பத்திலே கொண்டு வந்தனர். அப்பிரேரணை எதிர்க்கட்சி பிரசன்னமாயிராத வேளையில் அரசாங்க உறுப்பினர்களாலேயே விவாதித்து தோற்கடிக்கப்பட்டது. அரசாங்க உறுப்பினர் மட்டுமே அதனை வாதித்து, எதிர்த்து தங்கள் கட்சியைச் சேர்ந்த சபாநாயகரில் சபைக்கு பூரண நம்பிக்கையுண்டென்று ஏகமனதான முடிவு கண்டனர்.

கடந்த கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முறையற்றதென்று எதிர்க்கட்சியிலுள்ள மூன்று கட்சிப் பிரமுகர்களும் வாதாடினர். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விவாதத்திற்குமுன் ஒரு விளக்கம் அளிக்க அனுமதி கோரினார்.

இவற்றையெல்லாம் நிராகரித்த சபாநாயகர் தக்க காரணம் எதுவும் காட்ட முடியவில்லை, அவர் காட்டிய காரணம் ஒன்று: இன்றைய கூட்ட அறிக்கையை ஏற்றே நீங்கள் இங்கு வந்திருக்கின்றீர்கள். எனவே இன்றைய நிகழ்ச்சிநிரலை ஒப்புக் கொண்டீர்கள்'' என்பதாம் உடனே எதிர்க்கட்சிகள் அனைவரும் வெளியேறினர்.

அரசாங்க சார்பில் பேசியவர்கள் ஒருவர் - அதுவும் அமைச்சர் - திரு. எஸ். தொண்டமான் அவ்விவாதம் ஒருதலைப்பட்டது. சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர் தம் கருத்தைத் தெரிவிக்க அனுமதி வழங்கியிருக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறியுள்ளார். அவருடைய தர்க்கரீதியான பேச்சுக்கு அவரின் செயல் அமையவில்லை. சுதந்திரமாக அங்கத்தவர் வாக்களிக்கலாமென்று அனுமதி வழங்கியிருந்தபோதும் அவர் அதனை எதிர்த்து வாக்களிக்காதது; இந்நாட்டில் ஒரு கட்சி ஆட்சிக்கு அடிகோலும் செயலென்று அஞ்சவேண்டியிருக்கின்றது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமுகமாக வெளியேறியது நாட்டின் ஜனநாயகத்துக்கு 'நடப்பு' இன்னு முண்டென்றும் சிங்கப்பூர் 'ஸ்ரைக்' போன்ற ஒரு கட்சி ஆட்சி இந்நாட்டில் உதயமாவது சாத்தியமல்ல தென்றும் நிரூபிக்கின்றது.

# ஆசிரியர்கள் வெளியேற்றம் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு!

(பச்சிலைப்பள்ளி)

"ஆசிரியர்களின் வெளியேற்றம் எமது நாட்டுக்குப் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்படும் சம்பளத்தைக் கொண்டு தமது வாழ்க்கைச் செலவைச் சமாளித்துக் கொள்ள முடியாததனாலேயே வெளிநாடுகளில் சாதாரண தொழிலாளி தரத்திலான வேலையையும் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இவ்வாறு பரந்தன் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. க. தங்கராசா, பரந்தன் கல்வி வட்டாரத்திலிருந்து ஓய்வு பெற்ற 7 அதிபர்களுக்கு நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசும்போது கூறினார்.

இவ்விழா பளை மகாவித்தியாலயத்தில் திரு. எம். செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் தியாகிகள் ஆவார்கள். அவர்கள் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் எதுவித நன்மைகளையும் எதிர்பாராமல் தமது சேவைகளை அப்பகுதிகளுக்கு வழங்கி வருகிறார்கள். அவர்கள் அப்பகுதிகளில் தமது கஷ்டத்தையும் பாராது உழைப்பதினால்தான் பின்தங்கிய பகுதிகளிலிருந்தும் சிறந்த கல்விமான்களும் தலைவர்களும் கிராமப்புறங்களிலிருந்தும் உருவாகக் கூடியதாக இருக்கிறது.

## 1982 முதல் டெலிவிஷனில் சிறுவர் நிகழ்ச்சி

(கொழும்பு)

தேசிய தொலைக்காட்சி சேவை 1982ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சிங்களத்திலும் தமிழிலும் சிறுவர் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் திட்டமிட்டுள்ளது.

## இனத் துவேஷத்தின் மூலவேர்கள்

தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பார்கள். நவீன உளவியல் வளர்ச்சியின் பின்னணியில் இந்தப் பழமொழி புதிய பரிமாணத்தை இன்று பெற்றுள்ளது.

திருத்த. இந்த முதுமொழியைச் சற்று மாற்றி, பாலர் வகுப்பிலிருந்து தீ வைப்பு வரை என்றால் இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் பொருத்தமாய் இருக்கும் என்று எனக்குப் படுகின்றது.

அண்மையில் ரெஜி சிறிவர்த்தனவைச் சந்திக்கும் நற்பேறு எனக்குக் கிடைத்தது. இலங்கையிலே கட்டாயமாக ஒருவரைச் சந்திக்கவேண்டுமென்றால் அது அவர்தான்.

இலங்கையில் அரசாங்கத்தால் வெளியிடப்படும் பாட நூல்களில் (மொழி) எவ்வாறு பல்வேறு இனங்கள் வர்ணிக்கப்படுகின்றன, அவர்களுக்கிடையிலான உறவுகள் எவ்வாறு வெளிக்கொணரப்படுகின்றன? மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆராய்ச்சியில் ரெஜியும், அவரது உதவியாளர்களும் இப்பொழுது ஈடுபட்டுவருகின்றனர்.

அவர் கூறிய சில 'சுவை' யான (?) தகவல்களை நான் இங்கு தொகுத்துத் தருகின்றேன்.

சிங்களப் பாடநூலில் இந்த நாட்டில் சிங்களப் பௌத்தர்கள் மட்டுமே வாழ்வதாகக் காட்டப்படுகிறது. தமிழ்ப் பாடநூலில் இந்நாடு பல இனங்கள் வாழும் ஒன்றாகக் காட்டப்படும்பொழுதிலும் சிங்கள இனத்திற்கே முதன்மை வழங்கப்பட்டுள்ளது. வர்ணிக்கப்படும் சூழ்நிலைகளும், பின்னணிகளும் சிங்களமயமானவையே. 'நட்சத்திர' நடிகர்கள் சிங்களவர்கள். தமிழர்களும், முஸ்லிம்களும் சிறு பாத்திர நடிகர்கள்.

இன்னும் ஒரு 'முஸ்பாத்தி'. தமிழ்ப் பாடநூலில் ஒரு படம்: சிங்கள, தமிழ், முஸ்லிம் பிள்ளைகளும், பெற்றோர்களும் கைகோர்த்து நிற்கின்றனர். படத்திற்குக் கீழே யுள்ள வாசகம்: நாம் எல்லோரும் சந்தோஷமான குடும்பம். சிங்களப் பாடநூலில் இந்தப் படம் இல்லை மாறாக இலங்கைப் ... சில கவிதை வரிகள்: இந்நாடு எனது நாடு ...

இன்னுமொன்று: ஆங்கிலப் பாடநூலில் ஒரு ஓட்டப்போட்டி நடைபெறுவதாக வர்ணிக்கப்படுகின்றது யார் வெற்றிபெறுவான் என நினைக்கின்றீர்கள்? நிச்சயமாகச் சிங்கள மாணவனாகத்தானே இருக்கமுடியும்! மற்ற இனத்தவர்கள் இந்த வெற்றியால் தாம் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாகக் கூறுகின்றனர்!

இவ்வாறு ஒற்றுமையான பயன் —யாழ், பொது நூலகத்திற்குத் தீவைப்பு

— வெளியான்

# மக்கள் கருத்து

## உண்மையல்ல

26-6-81ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த 'இறக்குமதியில் ஈடுபட்ட கூலியாட்களுக்கும் பணம் வழங்கப்படவில்லையாம்—அமைச்சருக்கு மகஜர்' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் குறிப்பிட்ட தனியார் வர்த்தக ஸ்தாபனம், இறக்குமதி வேலைகளில் ஈடுபட்ட கூலியாட்கள், வத்தைகள், மோட்டார் இழுவைப் படகுகளுக்கு உரிய கூலிப்பணத்தை வழங்கவில்லை என்று உணவு, கூட்டுறவு அமைச்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்செய்தியில் எதுவித உண்மையுமில்லை. மேற்படி செய்தியில் தெரிவித்துள்ளபடி, கடந்த மாதம் காங்கேசன்துறைக்கு வந்த 'கோட்டாபேனியுக்' என்ற கப்பலிலிருந்து அரிசி மூடைகளை இறக்குமதிசெய்த வர்த்தக ஸ்தாபனம் எங்களுடையதுதான் என்ற செய்தியில் குறிப்பிட்டபடி எமது ஸ்தாபனம் தவறு நடந்ததில்லை. உண்மையின்படி நடந்த சம்பவம் இதுதான்.

எமது ஸ்தாபனம் இறக்குமதி வேலைகள் முடிந்தவுடன் கூலியாட்கள், லொறி, வத்தை மோட்டார் இழுவைப்படகு ஆகிய கூலிகளின் கணக்குப் பார்த்துப் பணம் கொடுத்துவிட்டோம். ஆனால் வத்தை, மோட்டார் இழுவைப் படகுக் கூலியில் 95 வீதம் பணம் எடுத்தபின் அவர்கள் மிகுதி எடுக்க வரவில்லை. இது அவர்களின் தாமதம். எமது தாமதமல்ல. இதை எமது ஸ்தாபனம் பணம் கொடுக்கவில்லை என்று குறிப்பிடுவது மிகவும் தவறு.

எஸ். கே. பி மூர்த்தி
உரிமையாளர்:
நியூ கோ ட்றேடிங் கோ,
காங்கேசன்துறை.

# நாடும் நடப்பும்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராக ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளும் கட்சிக்குள்ள பெரும்பான்மைப் பலத்தினால் எதிர்பார்த்தபடி நிறைவேற்றப்பட்டுவிட்டது.

எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் இழந்துவிடவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளாதது இதற்குச் சான்று!

எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் ஏதோ பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும் என எதிர்பார்ப்பதற்கில்லை. இத்தீர்மானமும் இதன் விவாதத்தில் சில ஆளும் கட்சி உறுப்பினர்களும் சில அமைச்சர்களும் நிகழ்த்திய உரைகள் வெளியுலகம் வேடிக்கை பார்க்கவைத்துள்ளன.

பாராளுமன்றத்தில் எதுவும் பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு. அதைத் தட்டிக் கேட்பதற்கு அவர்களைத் தெரிவுசெய்து அனுப்பிவைக்கும் பொதுமக்களுக்கே உரிமை கிடையாது.

திரு. அமிர்தலிங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் யார், யார், எப்படியெப்படி என்று இனம் கண்டு கொள்வதற்கு மக்களுக்குவாய்ப்பளித்திருக்கிறது.

இந்த நாட்டில் நீதி இன்னமும் முற்றாகச் செத்துவிடவில்லையென்பதற்கு உதாரணமாக பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சபையிலிருந்தும் வாக்களிக்காமலிருந்தது ஓர் உதாரணம்.

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. செளமியமூர்த்தி தொண்டமான் தனித்துவமிக்க ஒரு தமிழ்த் தலைவன் என்பதை நிரூபித்திருக்கிறார். பதவி பெரிதல்ல மனிதாபிமானமும் ஜனநாயகமும்தான் தமக்குப் பெரிதென்பதைத் துணிச்சலுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பொது மேடையில் தேர்தல் பிரச்சாரங்களுக்காக உபயோகிக்கப்படும் சில வார்த்தைகளைச் சிலர் பேசக்கூடாத இடத்தில் பேசியதற்கு திரு. தொண்டமான் சரியான சாட்டையடிகொடுத்துத் தமது சக அமைச்சர்கள் சிலரின் முகத்தில் நியாயமான முறையில் கரிபூசியிருக்கிறார்!

பொறுத்தத்தில் இந்த 'நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி நல்லுறவை உருவாக்க வேண்டுமென்ற உண்மையான சிலர் மேற்கொண்டுவரும் முயற்சிகளைச் சீர்குலைக்கவே உதவியிருக்கிறதென்று சொல்லவேண்டும்.

இனவாதத்தை ஒழித்துக் கட்டி தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது தான் ஐக்கியதேசியக் கட்சியின் ... இருக்குமானால் இப்படியொரு விவாதத்துக்கு அது இடமளித்திருக்க முடியாது.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை ஐக்கியதேசியக் கட்சிக்கு இருக்குமானால் அதிகப்பிரசங்கித்தனமான பேச்சுகளுக்கு இடமளித்திருக்கமாட்டாது.

1977-ம் ஆண்டில் திரு. ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தபின் பாராளுமன்

(4-ம் பக்கம் பார்க்க)

வங்காளவிரிகுடாவிலுள்ள

# நியூமூர் தீவை இந்தியா விட்டுக்கொடுக்காது

## பிரதமர் இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 27

வங்காளவிரிகுடாவிலுள்ள நியூமூர் என்ற சிறிய தீவு பங்களாதேஷுக்குச் சொந்தமானதென்ற அந்த நாட்டின் கூற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது"

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நிருபர்களிடம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் மேலும் கூறுகையில், "நியூமூர் தீவை எக்காரணம் கொண்டும் இந்தியா, பங்களாதேஷுக்கு விட்டுக்கொடுக்காது" என்றார்.

'தெற்குதல்பதி' என்ற பங்களாதேஷினால் அழைக்கப்படும் இத்தீவில் இந்தியா கடந்த மே மாதம் முதல் தனது இராணுவத்தை அனுப்பிவைத்து பாதுகாத்து வருகிறது.

இதுகுறித்து ஐ. நா. விசாரணை ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று பங்களாதேஷ் அதனைக் கேட்டுள்ளது. (வெ)

## சதாத் கருத்து

கெய்ரோ, ஜூலை 27

இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து அது வெளியேறவேண்டுமென்று தனது நாடு ஒரு போதும் கேட்டுக்கொள்ளாது என்று எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

'தெற்கு லெபனானில் இஸ்ரேலியத் துருப்புக்களுக்கு மிடையே நடைபெற்றுவரும் யுத்தநிறுத்தமான பொறுப்பை அவ்விருதரப்பினரும், சிரியாவுமே ஏற்கவேண்டும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் பெய்ருத் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் மிருகத்தனமான தென்று ஜனாதிபதி சதாத்தின் உத்தியோகபூர்வமான செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

லெபனானில் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளை சீர்குலைக்க இஸ்ரேல் முற்படக்கூடாதென்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு அலெக்சாண்டர் ஹெய்க் கேட்டுள்ளார்.

பலஸ்தீனியர்களில் ஒரு பிரிவினர் யுத்தநிறுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யசீர் அரபாத் கண்டித்துள்ளார். (வெ)

## உதைபந்தாட்டக் குழுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வெலிங்டன், ஜூலை 27

நியூஸிலாந்திற்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க உதைபந்தாட்டக் குழுவொன்றுக்கு வழங்கப்பட்ட 'விசா' செல்லுபடியாகுமா என்று கவனித்துத் தெரிவிக்குமாறு நியூஸிலாந்தின் பதில் பிரதமர் அந்நாட்டின் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தைக் கேட்டுள்ளார்.

இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்காவின் உதைபந்தாட்டக்குழுவிற்கு எதிராக நியூஸிலாந்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். (வெ)

## நாடும் நடப்பும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தின் முதல் கூட்டத்தில் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் முன்னைய ஆட்சியாளரைப் பார்த்து மிகத்தெளிவாகவும் உறுதியாகவும் "நீங்கள் ஆட்சியிலிருந்த போது எதிர்க்கட்சியில் நாங்கள் எழுந்து எங்கள் கருத்தைச் சொல்லப்புறப்பட்டால் உங்கள் ஆட்கள் கூச்சல்போட்டு எங்கள் பேச்சைக் கேட்கவிடாமல் செய்தார்கள். ஆனால் நாங்கள் அப்படி நடந்து கொள்ள மாட்டோம்." என்றார்.

ஆனால் பிரதமர் பிரேமதாசா இன்று சபையிலிருக்கும்போது கூட அரசாங்கக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர் முன்னைய உறுப்பினர்களைப் போலவே கூச்சல் போட்டு எதிர்க்கட்சியினரின் பேச்சைக் கேட்கவிடாமல் தடுத்துவிடுகின்றனர்.

இதுவும் ஒரு பாராளுமன்ற சம்பிரதாயமோ!

- ஊர்சுற்றி

## மாஸ்கோ பயணமானார்

(யாழ்ப்பாணம்)



மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் சர்வதேசகம்யூனிஸ்ட் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வர்த்தகர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் மாஸ்கோ பயணமானார்.

நாற்பத்தைந்து தினங்கள் மாஸ்கோவில் தங்கியிருக்கும் திரு. பூபாலசிங்கத்துடன் இலங்கையில் இருந்து மூன்று பிரதிநிதிகளும் சென்றுள்ளனர். (வெ)



மண்டைதீவு மகா வித்தியாலய ... பேச்சுப்போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலிடம் செல்வி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியத்திற்கு ... வர்த்தகரும், கதிர்வேலாயுத சுவாமி கோவில் திருப்பணிச்சபை தலைவரும் அன்னையவையவற்றின் பிரதம விருந்தினருமான திரு. மு. பொன்னுத்துரை பரிசு வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோரும் அருகே காணப்படுகின்றனர்.

# இன்றைய பலன்

ஆடி மாதம் 13ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(28-7-81)

மேடம்; வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவிய லாபத்தைக்கொண்டு வரலாம். வணிகர்கள் புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கு விரும்புவீர்கள். நண்பர்கள் ஆதரவு கிடைக்கும்.

இடபம்! குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும் குன்றென நிமிர்ந்து திற்பீர் குவிந்திடும் புகழும்.

மிதுனம்: வாகனம் செலுத்துவோர்க்கு நன்மதிப்புக்கிடைக்கும். கல்வித்துறையில் புதிய உற்சாகம் கிடைக்கும். அறிஞர்களின் ஆதரவு உண்டு. சுப தினம்.

கடகம்: சுபகாரியம் ஒன்றுக்கு வழிகோலப்படலாம். வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும். புத்திர வழியாலும் நன்மையுண்டு.

சிங்கம்; பொருள்கைவிட்டுப் போவதற்கு இடமுண்டு. வாகனச்சாரதிகள் கவனம் செலுத்தவும். எதிரிகள் தாக்குவார்: எதிலும் முன்யோசனை விரும்பத்தக்கது.

கன்னி: கண்ணியமான நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய தொடர்புகள் ஏற்படும். சாதனைகள் வாழ்க்கை குதூகலம் நிறைந்ததாக இருக்கும்.

துலாம்: எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும் புதிய தொழில்களை இன்று ஆரம்பிக்க போடவும். கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம் துக்கதினம்.

விருச்சிகம்: தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும். மூத்தோர்கள் உதவிக்கு இடம் ஏற்படும். சிலருக்கு தெய்வ வழிபாட்டில் ஆர்வம்பிறக்கும். ஸ்தல யாத்திரைக்கு இடமுண்டு.

தனு; பொருளாதார நிலை சீரடையும் இல்வாழ்க்கையில் எதிர்பாராத வரவிற்கு இடம் உண்டு. பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம்.

மகரம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக்கிடைக்கும். இல்லம் பல்கலை மயமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். கலஸ் ரவழியாலும் கண்ணியம் சேரும்,

கும்பம்: நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவைஎடுக்கும். பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் தன்மை உண்டு.

மீனம்: இடர்கள் பலதாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அடைந்துக் கொள்ள நேரிடும்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலக்கிய வழி திருத்தப் பதிப்பு

[யாழ்ப்பாணம்]

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய 'இலக்கியவழி' திருத்தப் பதிப்பு வெளிவந்துள்ளது.

க. பொ. த. உயர்தர வகுப்புக்குப்பாடநூலாகவுள்ள இலக்கிய வழிதிருத்தப்பதிப்பின் மறு பிரசுரம் பண்டிதர் ஐயாவின்எண்பத்துமூன்றுவது பிறந்த தினப் பரிசாகும் என்று பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு. க. பஞ்சாட்சரம் செய்தி வெளியிட்டுள்ளார். (ஈ)

## சின்னமடுமாதா ஆலயத்திருவிழா

[யாழ்ப்பாணம்]

சின்னமடுமாதா ஆலயத்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இத்திருவிழா இம்மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை நற்கருணைப்பவனியுடனும், 5ம் திகதி புதன்கிழமை சின்னமடு மாதா சுருபபவனியுடனும் முடிவடையும்.

ஐக்கிய அமெரிக்க சமூக-சமய தொடர்புசாதனத்தைச் சேர்ந்த அருட்திரு வியாகுலதாசன் இந்த திருவுரைகள் நிகழ்த்தவுள்ளார். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியைச்சேர்ந்தவர். வெ




மீண்டும் வந்துள்ளது

Pilot BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/80

விற்பனையாளர்: ஷோ வொலஸ அன்ட் ஹெஜஸ கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

SRI COMMUNICATION

## இப்படியும் நடக்கிறது

வடபகுதி இளைஞர்களின் ஜெர்மன் 'படையெடுப்' பின் உண்மைநிலை அறியும்பொருட்டு ஜெர்மன் பத்திரிகையா ளர் கோஷ்டி யொன்று அண்மையில் கொழும்பு வந்து, திருப்பி விடப்பட்டதல்லவா?

இக்கோஷ்டியில் வந்த ஒரு பத்திரிகையாளரையாவது சந்திக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்தவர்களின் பத்திரிகை நிருபர்களையும் மிஞ்சிய தமிழ் அரசியல் வாதிகளும் உண்டு. நேரில் சந்திப்பது முயற்கொம்பாகிவிடவே, தொலைபேசி மூலமாவது ஒரு ஜெர்மன் பத்திரிகையாளருடன் தொடர்பு கொள்ள ஒருவருக்கு கடைசி நேரத்தில் பெருஅதிர்ஷ்டம் கிடைத்தது.

ஹோட்டலில் தங்கியிருந்த குறிப்பிட்ட ஜெர்மன் பத்திரிகையாளரின் பெயரைச் சொல்லி ''அவசரம் பேச வேண்டும்'' என்று அவர் கூறவே, ''ஜஸ்ட் ஹோல்ட் த லைன் ...'' என்று பதில் கிடைத்தது. சில நிமிடங்களுக்குள்ளாகவாவது பெரிய விஷயங்களை இத்தொலைபேசிச் சந்திப்பு மூலம் அவிழ்த்து விடலாம் என்ற துடிப்பு அவருக்கு.

என்ன 'அதிர்ஷ்டம்!' நமது கதாநாயகன் ஆங்கிலத்தில் பேசினார். அடுத்த முனையிலிருந்த ஜெர்மன் பத்திரிகையாளருக்கோ ஆங்கிலம் சூன்யம்! ஒரு சில வார்த்தைகள் கூடத் தெரியாது, புரியாது! எவ்வளவோ முயன்றும் அந்த ஜெர்மனியருக்கு ஆங்கிலம் துப்பரவாகப் புரிய வில்லையாம்! 'யோக' மானவருக்கு இப்படியும் ஒரு தோல்வி.

— ஊடுருவி

### தேவை

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு மெக்கானிக்குகள், பிற்றர்கள், வெல்டர்கள், எலக்ரிசியன்கள், தச்சுத் தொழிலாளர்கள், மேசன்மார், கூலியாட்கள் தேவை. இரு புகைப்படங்களுடன் உடன் நேரில் வரவும். பளாலி மத்தி கிராம அபிவிருத்திச் சபை அலுவலகம், நடேஸ்வராக் கல்லூரி வீதி, காங்கேசன்துறை.

0457

### பயிற்சி

றேடியோ - டெ லி வி ச ன் ' ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சிகள்- மற்றும் P. M. G. [Radio Officer] பயிற்சி ஆகியன ஆரம்பம் 2-8-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

0422

### ரமழான் சிந்தனை

ஒருவர் தனது ஹலாலான நியாயமான சம்பாத்தியத்திலிருந்து நோன்பாளிக்கு நோன்பு திறக்க உதவினால் ரமழானின் இராக்காலங்களில், அவர் மீது மலக்குகள் அருள் சொரிகின்றனர். லைலத்துல் கத்ர் இரவில் ஜிப்ரியீர் [அலை] அவர்கள் அம்மனிதருடன் கைலாகுசெய்கின்றார்கள். அதன் அடையாளம் அம்மனிதனின் உள்ளத்தில் இரக்க சித்தம் பெருக்கெடுத்து ஓடும்.

[ஆதாரம்:- குஹாவல் பயான்] ஸகர் முடிவு-4-28 நோன்பு திறக்கும் நேரம்: 6-31, தொகுப்பு: மௌலவியா பௌசியாகரீம்.


உங்கள் முதலீட்டிற்கு

27 0/0 வரை வட்டி

வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுககு

★ ஆயுள் காப்புறுதி இனம்

★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்

(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம்.

★ நம்பிக்கை

★ பாதுகாப்பு

★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்

த பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

TFC 191, 249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், போன்: 7680


## ---யாழ். தேர்தல் தோல்விக்காக ---
## அமிரைப் பழிவாங்க அரசு எத்தனிக்கிறது

### விநோதன் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சிகளையும் அதன் தலைவர்களையும் ஒழித்துக்கட்டிவிட்டு ஐ. தே. காவின் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிலை நாட்ட இன்றைய அரசு சதி செய்கிறது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட பிராந்திய அமைபாளர் திரு.கு.விநோதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளமையையும் பலமாக கண்டித்த திரு.விநோதன் தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:-

சமீபத்தில் நிகழ்ந்த யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் எட்டில் ஒரு பங்கு வாக்குகளைக் கூடப்பெறாத ஐ. தே. க. வின் உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சி தலைவர் திரு. அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளனர்.

ஆளும்கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொணடுவருவது நாடறிந்த உலகறிந்த ஒரு வழக்கமாகும். ஆனால் எதிர்க்கட்சி முதல்வருக்கு எதிரான இத்தகைய தீர்மானம் கொண்டுவந்து விவாதிப்பது உலகிலே கண்டும் கேட்டும் இராத ஓர் அதிசயமாகும.

இருந்தும் ஆளும் கட்சியினர் இவ்விஷயத்தில் அழுங்குப் பிடியாக நிற்பது ஏன்? எதிர்க்கட்சியானது ஆளும் கட்சிக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்களா? அல்லது எதிர்க்கட்சி என ஒன்று இருக்கும் ஜனநாயக பாரம்பரியத்துக்கு ஒரு முற்று புள்ளி வைப்பதற்கு முனைந்து நிற்கிறார்களா? அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்ற முறபோக்கு சக்திகளின் ஆதரவுடன் தமிழர் விடுதலைக்கூட்டணி யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் ஐ. தே. க. வை முற்று முழுதாய் தோற்கடித்ததற்காக அதன் செயலாளர் நாயகத்தை பழிவாங்க எத்தனிக்கின்றார்களா? எதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

கடந்த ஆண்டு தமக்கு எதிராக மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடிய சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின தும் இதர சில பிரபலஸ்தர்களினதும் குடியியல் உரிமைகளை அவர்கள் பறித்தனர். இதன் மூலம் அக்கட்சியை ஆட்சி பீடம் ஏறுமல் தடுக்கலாம் எனக் கனவு காண்கின்றனர். அடுத்து எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானத்தை கொண்டு வருவதன் மூலம் அக் கூட்டணியையும் பலவீனப் படுத்தலாம் என எண்ணுகிறார்கள். இவ்வாறு இதர கட்சித் தலைவர்களையும் கட்சிகளையும் ஒழித்துக்கட்டி விட்டு இறுதியில் ஐ. தே. க. வின் ஒருகட்சி சர்வாதிகாரத்தை நிலைநாட்ட சதி செய்கிறார்கள். [இ]

### வட்டக்கச்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''சிவபாதம் என்பவர், வீட்டில் தோட்டம்செய்துவந்தார். ஒரு தடவை அவர், நீர் இறைத்ததற்காக எங்களுக்கு 350 ரூபா தரவேண்டும். இதனைக் கேட்டபோது, பசுபதி என்பவர் சண்டைக்குவந்தார். சம்பவதினம் பசுபதி, மார்க்கண்டு என்பவரையும் கூட்டிக் கொண்டுவந்து, 'வாடா சண்டைக்கு' என்று கத்தினார். அப்போது நான் அருகில் சென்றபோது, ஆயுதமொன்றினால் என்னைத் தாக்கினார். இச்சம்பவத்தை அவதானித்த மாமி [இறந்தவர்] பசுபதியின் சட்டையைப்பிடித்து இழுத்த போது, அவர் பொல்லால் தாக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து மாமி கீழே விழுந்துவிட்டார்.''

மரண விசாரணையை நடத்திய கிளிநொச்சி பதில் நீதிபதி திரு. வி. எஸ். சுந்தரலிங்கம் கொலை என்று தீர்ப்பளித்தார்.

இக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்மீது உருத்திரபுரத்தைச்சேர்ந்த மார்க்கண்டு சிவஞானம் [19வயது], இவரது சகோதரர் மார்க்கண்டு சிவபாதம் [29வயது], இவர்களது மைத்துனர் கதிரவேலு பசுபதி [29 வயது] ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி நீதவான் திரு. க. செகஜோதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவர்கள் மூவரையும் அடுத்த மாதம் பத்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சிப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. எஸ். சண்முகராஜா சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

நிலைமை இவ்வாறிருக்க, சந்தேகநபர்களில் ஒருவரான சிவபாதத்தின் வீடு. நேற்று தீக்கிரையானது.

## மினிபஸ் - சைக்கிள் விபத்தில் இளைஞர்பலி!

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவனில்நேற்று இரவு இடம்பெற்ற மினி பஸ்—சைக்கிள் விபத்தில் 16 வயது இளைஞர் ஒருவர் பலியானார்.

ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த 16 வயதான பசுபதி சுலேந்திரன் என்பவரே இவ் விபத்தில் பலியானவராவார். இவருடன் சைக்கிளில் வந்த அதே ஊரைச்சேர்ந்த கிருஷ்ணன் சிறிதரன் [வயது 16] என்பவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ]

## லிவர்பூலில் மீண்டும் வன்செயல்கள்

லிவர்பூல், ஜூலை 27

பிரிட்டனிலுள்ள லிவர்பூல் நகரில் மீண்டும் வன்செயல்கள் தலைதூக்கியுள்ளன.

இன்று காலை லிவர்பூல் நகரில் கறுப்பு இன இளைஞர்களுக்கும பொலிசாருக்குமிடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன.

## இன்று சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

பத்திரிகைநிருபர்களுக்கும், தொழில்அமைச்சு அதிகாரிகளுக்குமான சந்திப்பொன்று இன்றுகாலை பொன்ட் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பை இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் ஏற்பாடுசெய்துள்ளது. [கெ]

## தகவலறிந்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

இருந்தார் இரவு 10 மணியளவில் றேடியோவில் தகவல் கிடைத்தது. பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் காங்கேசன்துறை வீதியில் சுடுபட்டு இறந்து கிடப்பதாகத் தகவல் கிடைத்தது. நான் இத்தகவலை உடன் மேல் அதிகாரிகளுக்கு அறிவித்தேன். நான் தகவல் கொடுத்த அதிகாரி சப்இன்ஸ்பெக்டர் வி தம்பாபிள்ளை.''

இவ்வழக்கில் 80-ம் ஆண்டு ஆகஸ்ட் 2-ம் தேதி பொலீஸ் சார்ஜன்ட் அன்ரனைக் கொலை செய்ததாகவும் வைத்தியர் சோமசுந்தரத்தைக் கொலை செய்யமுயற்சித்ததாகவும் இராணுவசிப்பாய்களான உப்பின், ஹெட்டியாராச்சி ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது'

விசாரணை ஆக்ஸ்ட் 11-ம் தேதிவரை ஒத்திபோடப்பட்டுள்ளது. ]கு-க]


அரசாங்க மரக் கூட்டுத்தாபன முகவர் நிலையம் கோண்டாவில்

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

(SALES REPRESENTATIVES)

வீடு கட்டுவதற்கும், மரத்தளபாடம் செய்வதற்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் ஏற்ற பாலை, முதிரை, யாவறனை ஆகிய குற்றி மரங்கள் பல அளவுகளிலும் தற்போது போதிய அளவு கையிருப்பில் உண்டு. இவற்றைக் கூடா நாட்டிலுள்ள தொகுதிகள்தோறும் விற்பனைசெய்வதற்குத் தொகுதிக்கு இருவர்வீதம் விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

மேலும் விபரங்கட்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு கிழமை நாட்களில் நேரில் வரவும்.

சி. சரவணபவன்

அரசாங்க மரக் கூட்டுத்தாபன முகவர்,

இல. 1, செட்டி வீதி,

யாழ்ப்பாணம். தொலைபேசி: 7615


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி [illegible] இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office S Lanka

Regd No. QB 100286/81. P. O. Box 49, Jaffna: தொலைபேசி: 7707, 389, 8126